# கொடுப்பதற்கு ஒரு சட்டம் மீள எடுப்பதற்கும் ஒரு சட்டம்

**(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B.)**

அதிகாரத்தைக் கைவிட எவரும் விரும்புவதில்லை. ஜனாதிபதியானதும் நிறைவேற்று அதிகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பேன் என உறுதிமொழி வழங்கித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் அதைத் தொடர்ந்த வரலாற்றையே கண்டுள்ளோம். சிலர் அதிகாரத்தை மேலும் கூட்டிக்கொள்ளுவதற்கும் முன்நிற்பார்கள். அரசியலமைப்பின் 18வது திருத்தம் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அதிகாரப் பகிர்வு கோரும் சிறுபான்மையினருக்கு அதிகாரப் பரவலாக்கல் கொண்ட அமைப்பில் பொறுப்பளிக்கப்பட்ட விடயங்களைக்கூட (Devolved subject) மத்திய அரசு மீள தனதாக்கிக் கொள்ளக்கூடியதான சந்தர்ப்பங்களே சட்டமாக காணப்படுகின்றன.

**உறுப்புரை 154 எ மாகாணச் சபைக்கான நியதிச்சட்டங்கள்**

(1). அரசியலமைப்பில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள ஒன்பதாவது அட்டவணையில் மாகாண சபையின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் செய்யப்பட வேண்டிய விடயங்களை நிரல் 1 - 'மாகாண சபை நிரல்' என்பதில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. இதன்படி குறித்த அட்டவணையில் நிரல் 1 இல் தரப்பட்டுள்ள விடயதானங்களுக்கு மாகாண சபை நியதிச் சட்டங்களை உருவாக்கி அதன்படி செயலாற்றத் தொடங்கலாம்.

(2). **மாகாண சபை தாபித்தலுக்கான அத்தியாயத்தை அல்லது 9ம் அட்டவணையை திருத்துவதற்கோ அல்லது நீக்குவதற்கோ பாராளுமன்றத்தினால் கொண்டுவரப்படும் சட்டமூலம்** எதுவும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதற்கும் பாராளுமன்ற நிகழ்ச்சித் தாளில் இடம்பெற முன்னருமான கால இடைவெளியில் அச்சட்டமூலம் சார்பாக சகல மாகாண சபைகளுக்கும் ஜனாதிபதியால் ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும் என்றும் அது சம்பந்தமாக ஒவ்வொரு மாகாண சபையும் அவ்வாறான திருத்தத்திற்கு அல்லது நீக்கத்திற்கு உடன்படுகின்றபோது பாராளுமன்றத்தில் சமூகமளித்து வாக்களிக்கும் சாதாரண பெரும்பான்மையைக் கொண்டு நிறைவேற்றப்படலாம் ஆனால் ஒன்றோ அதற்கு மேற்பட்ட மாகாண சபைகள் குறித்த அத்தியாயத்தை அல்லது அட்டவணையை திருத்த அல்லது நீக்க உடன்படாதபோது அச்சட்ட மூலமானது உறுப்புரை 82இல் தேவைப்படுத்தப்பட்டவாறு விஷேட பெரும்பான்மையைக் கொண்டு நிறைவேற்றப்படலாம். (விஷேட பெரும்பான்மை என்பது சமூகமளிக்காதோர் உட்பட மூன்றில் இரண்டு உறுப்பினர்களின் சம்மதம் தெரிவித்து வாக்களிக்க வேண்டும்.)

(3). அதேபோன்று **மாகாணசபை நிரலில் (நிரல் 1) தரப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயத்தை திருத்தவோ அல்லது நீக்கவோ தொடர்பிலான பாராளுமன்றத்தின் சட்டமூலம்** வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் அவை பாராளுமன்ற நிகழ்ச்சித்தாளில் இடம்பெறுவதற்கு முன்னதான குறிப்பிடப்பட்ட கால இடைவெளியில் ஜனாதிபதியினால் ஆற்றுப்படுத்தப்பட்டு சகல மாகாண சபைகளும் ஏற்றுக்கொண்டால் பாராளுமன்றத்தில் சமூகமளித்து வாக்களிக்கும் சாதாரண பெரும்பான்மையைக் கொண்டு நிறைவேற்றலாம். ஆனால் ஒன்றோ அதற்கு மேற்பட்ட மாகாண சபைகள் குறித்த விடயத்தை திருத்த

அல்லது நீக்க உடன்படாதபோது அச்சட்ட மூலமானது உறுப்புரை 82இல் தேவைப் படுத்தப்பட்டவாறு விஷேட பெரும்பான்மையைக் கொண்டு நிறைவேற்றப்படலாம். (முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவை அரசியல் சர்ச்சைக்குள் மாட்டிவிட்டு பிரச்சினையை உருவாக்க காரணமானது இந்த உறுப்புரையின் பிரிவேயாகும். நிரல் 1- மாகாண சபையின் விடயதானமாகவிருந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் சமுர்த்தி திவிநெகும விடயத்தை நிரல் 1 இல் இருந்து நீக்கி நிரல் 11 (ஒதுக்கிய நிரலுக்கு) மத்திய அரசுக்கு மாற்றிக் கொள்ள எடுத்த நடவடிக்கையின்போது எட்டு மாகாண சபைகளின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது. வட மாகாணத்தில் அத்தருணம் சபை உருவாக்கப்படவில்லை. 2007லில் வட-கிழக்கு மாகாணசபை பிரிக்கப்பட்ட பின்பு கிழக்கில் தேர்தல் நடத்தப்பட்டு சபை நடவடிக்கைகள் ஆரம்பித்த போதும் வடக்கு மாகாணம் மத்திய அரசின் ஆட்சியிலேயே இயங்கி வந்திருந்தது. சபையின் அங்கீகாரம் பெற முடியாததினால் ஆளுநரின் அங்கீகாரத்தை பெற்று அதை சபையினதாக ஏற்க எடுத்த முயற்சிக்கு எதிராக பதினொரு ஆட்சேபனை மனுக்கள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. அதில் ஒரு மனு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சபைக்காக ஆளுநர் சந்திரசிறியின் அங்கீகாரம் பெறுவது அரசியலமைப்புக்கு முரணானது என்ற வாதம் அதில் முன் வைக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கை ஷிராணி பண்டாரநாக்காவின் தலைமையில் மூன்று நீதியரசர்களின் குழாம் விசாரணை செய்து தீர்ப்பை 31.10.2012 அன்று வழங்கியது. அச்செயல் அரசியலமைப்புக்கு சட்டவிரோதமானது என்றும் அதை நிறைவேற்ற மக்கள் தீர்ப்பு பெறப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது. இந்தத் தீர்ப்பினால் அதிருப்தி அடைந்த அரசு அவருக் எதிராக பல குற்றச்சாட்டுக்களை சுமத்தி பாராளுமன்றம் மூலமாக (impeachment) பதவியினின்றும் வெளியேற்றிய பின்பு மொகான் பீரிஸ் என்பவர் பிரதம நீதியரசராக நியமனம் செய்யப்பட்டார்.)

**(4). மாகாண சபை நிரலில்** தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் மீது சட்டம் ஆக்கும்படி ஒன்றோ பலவோமான சபைகள் தீர்மானத்தின் மூலம் பாராளுமன்றத்தை வேண்டுமிடத்து பிரசன்னமாயுள்ள உறுப்பினர்களில் சாதாரண பெரும்பான்மை கொண்டு நிறைவேற்றும் போது தீர்மானம் நிறைவேற்றிய அந்தந்த குறிப்பிட்ட மாகாணங்களுக்கு மட்டுமே அவை ஏற்புடையதாக இருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

**(5). நிரல் 111 - ஒருங்கியை நிரல்** விடயங்களின் சூழ்நிலை காரணமாக பாராளுமன்றம் தோதானதெனக் கருதும் ஏதாவது விடயம் தொடர்பில் சகல மாகாண சபைகளுடனும் கலந்தாலோசனை செய்து 9ம் அட்டவணையிலுள்ள ஒருங்கியை நிரல் என்ற நிரல் 111 இலுள்ள விடயம் தொடர்பாக பாராளுமன்றம் சட்டங்களை இயற்றலாம். ஒவ்வொரு மாகாண சபையும் ஒவ்வொரு விடயத்தின் சூழ்நிலைகளிலும் அது தோதானதெனக் கருதுகின்றபோது பாராளுமன்றத்துடனான கலந்தாலோசனையின் பின்னர் ஒருங்கியை நிரலில் உள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் எம்மாகாணத்துக்கென தாபிக்கப்பட்ட மாகாண சபையோ அதற்கேற்ற நியதிச் சட்டங்களை ஆக்கலாம்.

(6). **மாகாண சபையினால் ஆக்கப்படும் நியதிச் சட்டத்தின்** ஏற்பாடுகள் எதுவும் இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய ஆக்கப்பட்டுள்ள சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததாக காணப்படுமிடத்து அத்தகைய ஆக்கப்பட்டுள்ள சட்டம் மேலோங்கி நிற்கும் என்பதோடு நியதிச் சட்ட ஏற்பாடுகள் ஒவ்வாதிருக்கின்ற அளவுக்கு

செல்லுபடியற்றவை ஆதல் வேண்டும்.
(7). **9ம் அட்டவணையில் நிரல் 11 என்ற மத்திய அரசுக்குரிய** ஒதுக்கு நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் சார்பாக மாகாண சபைகள் நியதிச் சட்டங்களை ஆக்க முடியாது.

அரசியலமைப்பின் 13வது திருத்தத்தில் மாகாண சபை பற்றி அறியத்தேவையான அடிப்படை விபரங்களும் முக்கியமான சட்ட ஏற்பாடுகளையும் பயன்பெறும் வகையில் பார்த்திருந்தோம். மாகாண சபை நிரலுக்குரிய முழுவதுமான கல்வி உள்ளூராட்சி சுகாதாரம் நீரப்பாசனம் திட்டமிடல் கமத்தொழில் கிராமிய அபிவிருத்தி எனும் சகல விடயதானங்களையும் விரிவாக பார்க்க நேரமும் காலமும் விரையமாகும் எனக் கருதி காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் என்ற சர்ச்சைக்குகுரிய விடயங்களை மட்டும் ஆராய எண்ணப்பட்டுள்ளது.

(தொடரும்)